உ

சிவமயம்



யாழ் வறுத்தலைவிளான் தெல்லிப்பளையைப்

பிறப்பிடமாகவும்

இலண்டனை இறுதிக்கால வதிவிடமாகக் கொண்டவரும்

முன்னாள் மகாஜனாக்கல்லூரி ஆசிரியையும்

திரு விசுவலிங்கம் துரைராஜாவின் பிரியபத்தினியுமான

அமரர் திருமதி மகேஸ்வரி அவர்களின்

# நினைவு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி மகேஸ்வரி துரைராஜா



தோற்றம்
**29.04.1928**

மறைவு
**28.07.2003**

## திதி வெண்பா

ஆண்டு சுபானு அமைந்த ஆடிமுந்நான்கில்
பூண்ட ஆடிஅமாவாசைத் திதியதனில் - மாண்பு
துரைராஜா பத்தினியார் மகேஸ்வரி அம்மையார்
இறைபதம் அடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச்சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம் பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா வெற்றிவேலாயுதப் பெருமாளே

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வரலாறு

சைவசமயத்தில் அதீத பற்றுக் கொண்டு, மற்ற மதங்களிற்கும் மதிப்புக் கொடுத்து இறப்பதற்கு சில மணி நேரங்களிற்கு முன்பும் தேவாரம் பாடி கடவுளை வணங்கி நன்றாக வாழ்ந்து தனது 75 வது வயதில் இறைவனடி எய்தினார். மகேஸ்வரி துரைராஜா அம்மையார் இவரது 16வது வயதினில் இருந்து ஒரு பிள்ளையார் படம் இவர் போகும் இடமெல்லாம் இவருடன் துணை போனது.

அன்னார் வறுத்தலைவிளான் தெல்லிப்பளையில் காலஞ்சென்ற அன்னலட்சுமி செல்லத்துரை தம்பதிகளிற்கு 2வது புதல்வியாக 29.04.1928 இல் மிகுந்த செல்வந்த குடும்பத்தில் அவதரித்தார். இவர் தனது கல்வியை ஞானோதயா பாடசாலை, யூனியன் கல்லூரியிலும் பின்பு புலமைப்பரிசில் பெற்று, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் மற்றும் இராமநாதன் கல்லூரியிலும் பயின்று Senior School Certificate exam இல் 3 Distictions for English, English Literature & Mathematics பெற்று Exempted for London Matriculation சான்றிதழ் கிடைக்கப் பெற்றார்.

இவர் Madras இல் Physical Education, Dancing (பரத நாட்டியம்) பயின்று நாடு திரும்பினார். அன்னார் 2 வருடம் Udupiddy Girls School இல் கடமையாற்றினார் . இவரின் திறமை அறிந்த முன்னாள் மகாஜன கல்லூரி அதிபர் திரு T. .T Jeyaratnam's அழைப்பை ஏற்று 33 வருடம் தொடர்ந்து மகாஜன கல்லூரியில் பணியாற்றினார். ஆரம்பத்தில் PT Teacher ஆக இருந்த பொழுது 1963 இல் PT Compition for Girls இற்கு அகில இலங்கை சம்பியன் பட்டம் கொழும்பில் பெற்றார். இது மஹகாஜனாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் கிடைத்த மாபெரும் வெற்றி. பின்பு Special English Training, ஆசிரியர் கலாசாலையில் பயின்று 1st place கிடைத்தது. மகாஜனாக் கல்லூரியில் கடமை புரிந்து Head of English Dept ஆகப் பொறுப்பேற்றார். அத்துடன் Teacher in charge for Girls Guiding, Desipline Teacher ஆகவும் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலி வடக்கில் விசுவலிங்கம் துரைராஜா (PWD) Technical officer என்பவரை மணம் முடித்து அவரின் பதவிகள் பல உயர்வுக்கு ஊன்றுகோலாக இருந்தார். இவர் தெல்லிப்பளை K. K. S Rd ஒரு நவீன வீடு கட்டி சீரும் சிறப்புமாக மூன்று குழந்தைகள் முறையே Ranjit, Sujit, Ajitha பெற்று பேரின்பமாக வாழ்ந்தார்.

இவர் மகளின் உயர்படிப்புக்காக இந்தியா சென்று அங்கும் ஒரு கல்லூரியில் Superviser ஆகவும் கணவர் பொறியியலாலராகவும் கடமை புரிந்து, பல சிறப்பம்சம் நிறைந்த பல தமிழ்நாட்டு கோவில்கள் (சபரிமலை, திருப்பதி) சென்று வந்தார்.

28.07. 03 இல் காலை 6.30 மணிக்கு Lewishm University Hospital இல் மாரடைப்பினால் இறைவனடி எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Mum

My mum is so special to me. She looked after me from my birth till she died. I have lost the most loving person in the world. I am sure I will not get back a person like her in my life to guide.

She educated me to her satisfaction & she wanted me to learn Dance, Music, Sport, I did. Upto now I have lived to make her happy.

My children love their grandma. I am sad that she did't see them growing and going to school and to my husband. She is a great mami.

**Ajitha**
Daughter

காலன் வருகையில் எம்மை நினைத்தழுதாய்
கண்ணான கண்மணியாய் எம்மை வளர்த்தாய்
சாலச்சிறந்த புத்திமதிகள் தந்தாய்
காலத்தால் மறவோம் எம் அருமைத்தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Most of you know her as Thurairajah teacher and some of you know her as Kunchu Auntie & Kunchu Acca. To Dad she was Kunchu and fortunately for us she was Ammah. She was a lady who was so giving of herself and lived life like there was no tomorrow. She was the most intelligent, well organised, and disciplined person I have known. She has done so much for my family and me that words cannot express our appreciation to her. She was an excellent wife to her husband, the greatest mother to her children and an excellent grandmother to her grandchildren. She was my mother, teacher, legal adviser and most of all a best friend. My family and I will deeply miss her. I will always carry her in my heart every where I go. God Bless her and may she rest in peace.

**In Loving Memory of our Mother**

God saw you getting tired and a
cure was not to be. So he put
His arms around you and
Whispered, "Come to me"
with tear filled eyes we
watched you and saw you pass
away, and although we loved
you dearly, we could not
make you stay.
A golden heart stopped
beating hard working hands at
rest, God broke our hearts
to prove to us that
He only takes the best.

**Ranjit, Sujit & family.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FAMILY T

Visuvalingam
+
Thangamuthu

Thurairajah

Late Kanagamani
+
Late Rasalingam

Late Sivarajah

Sowp

Late

Ranjit

Sujit
+
Carol

Kasandra

Eric Ro

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LY TREE

Sellathurai
+
Annaledchumi

late
Sowpakiyawathy
+
Late Rajaratnam

**Maheswary**

Late Rajaratnam
+
Irene

Capt Kandasamy
+
Kamalawathy

Mangalapoopathy
+
Kathirkamanathan

Ajitha
+
Mohan

Roshan

Priyaangha

Brannavan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகிறோம்

எமது குடும்பத் தலைவி மகேஸ்வரி துரைராஜா அவர்களின் பிரிவைத்தொடர்ந்தும், இறுதிக்கிரியைகளின் போதும், எமது இல்லத்திற்கு வந்து மலர் அஞ்சலி, கண்ணீர் அஞ்சலி, இரங்கல் அஞ்சலி உட்பட எல்லா வழிகளிலும் எமக்கு உதவியாக இருந்த உற்றார், நண்பர்கள், அன்பர்கள், அயலார் அனைவருக்கும், வெளிநாடுகளில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி, தந்திகள் மூலம் எமது துயரைப் பகிர்ந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும், இறுதிக்கிரியைகளை முன்னின்று நடத்திய அனைவருக்கும் எமது நன்றிகள்.

கணவன்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
உறவினர்கள்



Printed by JR Print London Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org